# கல்வி நவீனமயப்படுத்தலின் அவசியம்

**புற்றளை மகா வித்தியாலயம்– புலோலி, பழைய மாணவர் சங்கத்தின் ஐக்கிய இராச்சியக் கிளை தினக்குரலுடன் 8ஆவது ஆண்டாக இணைந்து நடத்திய பாடசாலை மாணவர்களுக்கான கட்டுரைப் போட்டியில் முதலாம் பரிசான ரூபா பத்தாயிரத்தினைப் பெற்றுக்கொண்ட கட்டுரை.**





நளினாசினி அம்பிகைபாதன், யாழ்/சுண்டுக்குளி மகளிர் கல்லூரி

அணுவைத்துளைத்து அண்டத்தைப் பிளக்கும் வகையில் முன்னேறியுள்ள அறிவியல் யுகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும் நாம் இன்று புதுமை நோக்கிய தேடலிற்குள் நுழைந்திருக்கின்றோம். நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாய் மாறிக்கொண்டிருக்கும் சிந்தனை வீச்சுக்களும் நவீனமயப்படுத்தப்பட்ட உலக உருவாக்கலுக்கும் புதுமை நோக்கி விரைந்து கொண்டிருக்கின்றது. இந்தச் சிந்தனைப் போக்கின் விளைவுகள் நவீனத்துவமான புதிய தலைமுறை உருவாக்கத்திற்கு வழிசமைத்துக் கொடுத்திருக்கின்றது. இதற்கு கல்வி மட்டும் அப்பாற்பட்டதல்ல. தனது பழைய ஆடையைக் களைந்து புதிய ஆடையை அணியத் தலைப்பட்டவற்றில் கல்வியும் ஒன்றுதான்.

இங்கு 'நவீனமயப்படுத்தல்' என்றால் என்ன என்று நோக்குங்கால் வினைத்திறன் மிக்க சீரிய சமூகத்தை கட்டி எழுப்பும் பொருட்டு மாற்றங்களுக்கு தம்மை ஈடு கொடுத்தவாறு பழையன கழிந்து புதியன புகுந்து புதியவற்றை நடைமுறைக்குக் கொண்டு வருதல் நவீனமயப்படுத்தல் என்று வரையறுக்கலாம். கல்வி நவீனமயப்படுத்தல் என்பது கல்விமுறையில் புதிய மாற்றங்களைக் கொண்டு வந்து அம்மாற்றங்கள் மாணவர்களுக்கு புகுத்தப்பட்டு அதனூடாக வினைத்திறன் மிக்க இளையதலைமுறையை உருவாக்கல் மற்றும் உள்வாங்கல் போன்ற நோக்கங்களை மையப்படுத்தி கல்வியில் மற்றும் கல்வி முறையில் புதியவற்றைப் புகுத்துவதைக் குறிப்பிடலாம். இவ்வாறு நவீனமயப்படுத்தலால் அவர்கள் எதிர்பார்த்த நோக்குகளும் இலக்குகளும் எட்டப்பட முடிவதால் கல்வி நவீனமயப்படுத்தல் என்ற எண்ணக்கரு உலக நாடுகளில் அண்மைக் காலங்களில் வேரூன்றி இருப்பதைக் காணமுடிகிறது.

கல்வி நவீனமயப்படுத்தல் என்ற சிந்தனை இந்த எண்ணக்கரு வலுப்பெற்றிருப்பதற்கான தேவைப்பாட்டை ஆராயுமிடத்து அசுரவேகத்தில் அதிகரித்துவரும் புதிய மாற்றங்களும் அறிவியல் யுகத்தின் புதிய சிந்தனைகளும் ஏனைய எல்லாத்துறைகளிலும் தன் தாக்கத்தைச் செலுத்தியது போல் கல்வித்துறையிலும் தன் தனித்துவத்தை தடம்பதிக்கத் தவறவில்லை. எனவே, இந்த இருபத்தோராம் நூற்றாண்டின் மாற்றங்களுக்குள் தன்னையும் இணைத்துக் கொள்வதற்காக கல்வித்துறையும் தன்னுள் மாற்றங்களை ஏற்கத் தயாரானது. இதன் விளைவு தான் கல்வியில் நவீனமயப்படுத்தலின் அவசியம் உணரப்பட்டு அதற்கான நடவடிக்கைகள் உலகளாவிய ரீதியில் திட்டங்கள் வகுக்கப்பட்ட படி உள்ளன.

கல்வி நவீன மயப்படுத்தலின் சிந்தனையின் முதலாவது நோக்கம் எழுந்ததன் காரணம் பூகோளமயமாக்கல் என்ற காரணிதான். உலகமே சுருங்கி உள்ளங்கையில் வரக்காரணமாய் இருந்த இணையத்தின் ஊடுருவல் மற்றும் அதன் பயன்பாடு கல்வி உலகும் சுருங்கி வீட்டுக் கணினிக்குள் வரக் காரணமாயிருந்தது இதுதான். குளோபலைசேசன் என்று சொல்லப்படுகின்ற பூகோள மயமாக்கலின் விளைவால் இன்று கல்வி நவீனமயப்படுத்த வேண்டிய கட்டாயத்திற்குள் தள்ளப்பட்டிருக்கின்றது. ஏனெனில், மாற்றத்திற்கு ஈடுகொடுக்காத எதுவும் காலத்தின் பிடியில் சிக்கி சிதைந்து போகும் என்பதை கல்வித்துறையும் உணர்ந்ததனால் தன் நிலைபேறை உறுதிப்படுத்துவதற்காக நவீன மயமாதலை தன்னுள்வாங்கும் நிலையில் கல்வி உள்ளது.

உலகின் போக்குக்கு ஏற்ற வகையில் தன்னை மாற்றுவது மட்டுமல்லாமல் பயனுறுதிமிக்க சமுதாய தளம் கல்வியிலேயே தங்கியுள்ளதால் நவீன மயப்படுத்தல் கல்வியைப் பொறுத்தமட்டில் இன்று தேவைப்பாடு உடைய ஒன்றுதான் என்பது மறுக்கப்படுவதற்கில்லை.

அமெரிக்கா, பிரித்தானியா போன்ற ஐரோப்பிய வல்லரசு நாடுகளில் கல்வி நவீனமயப்படுத்தல் வெற்றிகரமாக செயல்முறைப்படுத்தப்பட்டாலும் இலங்கை, இந்தியா போன்ற மூன்றாம் உலக நாடுகளாகச் சொல்லப்படும் ஆசிய நாடுகளில் இது பாரியதொரு சிக்கல் நிலையையே காட்டுகின்றது. ஏனெனில், இலங்கையைப் பொறுத்தமட்டில் இலவசக்கல்வி அரசினால் வழங்கப்படுவதால் மாணவர்கள் வளங்களை வீண் விரயம் செய்வதால் இங்கு கல்வி, வினைத்திறன் மிக்க மனிதவளத்தின் உருவாக்கத்திற்கு காரணமல்லாது கல்வி விரயத்திற்கே அதிகளவு காரணமாய் அமைந்துள்ளது.

கட்டாயக்கல்வி, இலவசக்கல்வி எல்லாம் கொடுத்து சிறந்த சமூகத்தை அதாவது, உலக சந்தையில் விலை போகக் கூடிய மனித வளத்தை உருவாக்குவதில் ஒரு நாடு தோற்றுப் போகிறது என்றால் அது சிந்தனைக்குரிய விடயம் தான். இதனால் தான் அரசுகள் கூட தற்காலத்தில் கல்வி தொடர்பான மாற்றுக் கருத்துகளை முன்மொழிந்த வண்ணம் உள்ளனர். இலங்கை போன்ற நாடுகளில் பொருளாதார ரீதியில் பாரிய செலவினை கல்விக்காக அரசு ஏற்றுக் கொண்ட போதிலும் வினைத்திறன் மிக்க மனித வளத்தை உருவாக்க முடியாததால் கல்வி நவீனமயப்படுத்தலின் அவசியம் உணரப்பட்டு தற்போது நாடளாவிய ரீதியில் அதை நடைமுறைப்படுத்தும் நோக்கு விரைவாக செயற்படுவதைக் காணலாம். இங்கு அறிவுடைய மூளைசாலிகள் இருக்கின்றார்கள். ஆனால், அவை வெறும் 'சான்றிதழ்படுத்தப்பட்ட அறிவை எல்லையாகக் கொண்டவர்கள்' அறிவியல், தொழில்நுட்பம், ஆங்கிலம் போன்றவற்றை அறியாத சர்வதேச ரீதியில் தம்மை இனம்காட்டி செயற்படுத்த முடியாத நபர்களாகவே இவர்கள் இருக்கிறார்கள் என்பது வேதனைக்குரிய விடயம்தான்.

இப்படியான குறைகளை அரசு உணர்ந்து கொண்டதால் தன்னுடைய கல்வித்திட்டத்தில் எங்கோ பிழை இருப்பதாக அறிந்து கல்வியை நவீனமயப்படுத்தி உலக சந்தையில் விலைபோகக் கூடிய தரமான மனித வளத்தை உருவாக்குவதில் உலகநாடுகளின் ஆதரவோடு அங்கீகாரம் மிக்க செயற்றிட்டங்களை வகுத்தவாறு உள்ளது. இதனது ஒரு அம்சம்தான் தற்காலத்தில் நடைமுறையில் இருக்கின்ற சட்டம். அதாவது, ஆங்கிலக் கல்வியையும் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பக் கல்வியையும் கட்டாயமாக்கியமை.

இவைதவிர 2013ஆம் ஆண்டில் முதன்முதலாக அறிமுகப்படுத்தப்பட்ட (உயர்தர மாணவர்களுக்கு) தொழில்நுட்பம் என்றதொரு தனியான பாடம் கல்வி நவீனமயப்படுத்தப்பட்டு தான் வருகின்றது என்பதை பறைசாற்றும் முகமாக அமைந்துள்ளது. உயிரியல் தொழில்நுட்பம், பொறியியல் தொழில்நுட்பம் போன்ற வாழ்க்கைக்கும் தற்கால அறிவியல் யுகத்திற்கும் பொருத்தப்பாடுடைய புதிய கல்விமுறை அறிமுகம், தொழில்நுட்பப் பாடத்தில் அமைவதால் சுயதொழில் மேற்கொள்ளக் கூடியதும் திறனுறுதி மிக்கதுமான மாணவசமூகம் கண்முன்னே இப்போது உருவாகிக் கொண்டிருப்பதால் வேலையற்ற பட்டதாரிகள் குறைக்கப்பட்டு வேலை செய்யக்கூடியதும் நாட்டிற்கு வருமானம் ஈட்டித்தரக்கூடியதுமான புதிய தலைமுறையைத் தோற்றுவிப்பதில் இந்தக் கல்வி நவீனமயப்படுத்தல் சிந்தனை வெற்றி பெற்றுள்ளது எனலாம்.

'பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல்ல' என்ற கூற்றுக்கு இணங்க காலத்திற்கு பொருத்தமானவற்றை பொருத்தப்பாடு உடைய வகையில் உள்வாங்குவதால் புதியவற்றை இணைத்துக் கொண்டு பழையவற்றின் குறைகளைப் புறந்தள்ளிவிட்டு புதுமை உலகில் பிரவேசிக்கும் போது சில சிக்கல்களை எதிர்நோக்க வேண்டியது தவிர்க்க முடியாதுதான்.

நவீனமயப்படுத்தல் என்ற பெயரில் கல்வியில் சில மேலைத்தேய பாணிகளை உட்புகுத்தும் போது அவை காலத்திற்கும் சூழலுக்கும் பொருத்தமுடையனவாய் அமைய வேண்டும். சில காலத்திற்குப் பொருத்துவனவாயினும் சூழலுக்கு ஏற்புடையதற்றதாகிவிடும். இவ்விடத்தில் யான் கூறவிளைவது யாதெனின் மேலைத்தேய கல்வி முறைகளான 3கூ, 6ண், 5ண் போன்றவை சில ஆசிய நாடுகளுக்குப் பொருத்தமற்றனவாய் உள்ளன. ஏனெனில், இவை குழுச் செயற்பாடுகள் சார்ந்தவையாக உள்ளன. மேலைத்தேய ஆசிரியர் ஒருவரை எடுத்துக் கொண்டால் அவருக்கு ஆகக்கூடியது இருபது மாணவர்கள்தான் இருப்பார்கள். ஆனால், கீழைத்தேசத்தில் ஆசிரியராக இருக்கக்கூடிய ஒருவருக்கு ஆகக்குறைந்தது நாற்பது மாணவர்கள் இருப்பார்கள். எனவே, கூடிய மாணவ எண்ணிக்கை உள்ள வகுப்பு ஒன்றில் இதுபோன்ற குழுச்செயற்பாடுகளை முன்னெடுக்கும்போது ஒவ்வொரு மாணவரையும் தனித்தனியாகக் கவனித்து அவர்களின் திறன்களை மேம்படுத்துவதற்கு ஆசிரியருக்கு கடினமானதாக இருக்கும். இதையே மேலைத் தேசத்தில் எடுத்து நோக்கினால் தனிமாணவ ஆளுமை விருத்தியில் ஆசிரியர் கூடிய கவனம் செலுத்த முடிவதால் ஆளுமைமிக்க சமூகத்தை உருவாக்க முடியுமாயிருத்தல்.

எனவே, எமது நாட்டிற்கும் சூழலுக்கும் ஒப்பான வகையில் தரமுயர்த்தக்கூடிய செயற்றிட்டங்களாயினும் அவை எமக்கு ஏற்புடையதா என்பதை ஆராய்ந்ததன் பிற்பாடே செயலாக்கத்தில் ஈடுபட வேண்டும். இல்லாவிட்டால் தோல்வியை நோக்கிய ஒரு பயணத்திற்கு முகம் கொடுக்க வேண்டும் என்பதை உணரும் கசப்பான அனுபவம் கிடைக்கும்.

உலகின் சமூக, பொருளாதார, அரசியல் தொழில்நுட்ப விஞ்ஞானத் துறைகளில் நவீன மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்ற ஒரு நிலையிலேயே இன்றைய இளம் சமுதாயத்தினர் நுழைகின்றனர் என 1998 யுனஸ்கோ அறிக்கை குறிப்பிடுவதன் பிரகாரம் நவீன கல்வியுகத்திற்குள் நுழைகின்றோம் என்பதை ஏற்றுக்கொண்டாலும் அவற்றிற்கான காரணங்களை இனி ஆழ ஊடுருவுவோமாயின் கல்வியினூடாக தற்போது மூன்று மயமாக்கல் செயன்முறைகள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. அவையாவன உலகமயமாக்கல், உள்ளூர் மயமாக்கல், தனிமனித மயமாக்கல் என்பனவாகும். அறிவுமயச் சமூகத்தின் மேம்பட்ட மாறுபடும் சூழலில் இளம் சமுதாயத்தினர் மிக வேகமாகச் சவால்களுக்கு முகம் கொடுப்பதற்கான தன்னம்பிக்கை உடையவர்களாக இருப்பதற்கு வெறுமனே அறிவுரையை மாத்திரம் வழங்குகின்ற கல்விச் செயற்பாடுகள் போதுமானதல்ல. இளம் சமுதாயத்தினருக்கு அறிவினையும் தகவல்களையும் கல்வியை உலகமாகப் பயன்படுத்தி வழங்குவதற்குப் பதிலாக விமர்சன ரீதியாகவும் சுயமாகவும் ஆக்கத்திறனாகவும் எவ்வாறு கற்கவேண்டும் என்பதற்குத் தேவையான கற்றல் திறமைகளை மாணவர்கள் மத்தியில் விருத்தி செய்வதற்கு முன்னுரிமை வழங்கப்பட்டதால் மேற்கூறப்பட்ட மூன்று மயமாக்கல் (Tripilaization) செயன்முறைகளால் புதிய மிலேனியத்தில் பல்வேறுப்பட்ட சவால்களையும் எதிர்கொள்வதற்கு பல்வகைச் சூழல்சார்ந்த நுண்ணறிவுகளில் குறிப்பிட்டதொரு அளவையாவது புதிய தலைமுறையினர் கொண்டிருத்தல் வேண்டும் என எதிர்பார்க்கப்பட்டது.

இங்கு முதலாவதாக உலகமயமாக்கலை எடுத்து நோக்குவோமாயின் உலகளாவிய முன்னேற்றத்திற்கு பொருத்தமுடையதான போக்கினை அதிகரிக்கும் வகையில் கற்றல்- கற்பித்தல் ஆய்வு என்பவற்றிற்காக உலகின் பல்வேறு பாகங்களில் இருந்து சிறந்த அறிவுசார்ந்த வளங்கள், உதவிகள் மற்றும் முயற்சிகளை ஒன்று திரட்டுதல் கல்விசார் உலகமயமாக்கலின் பிரதான பண்பாகும். இத்தகைய கல்வியில் காணப்படும் நவீனத்துவப் போக்குகளாக பின்வருவனவற்றை குறிப்பிடமுடியும்.

நாடுகளுக்கிடையிலும் சமூகங்களுக்கிடையிலும் தனிநபர்களுக்கு இடையிலும்.

1. வலயமைப்பு கற்றல் (Web based Learning)
2. வழிவரு கற்றல் (E Learning)
3. சர்வதேச விஜயங்கள்
4. கற்றலிலும் ஆய்விலும் வலையமைப்புக்களை பயன்படுத்தல்.
5. குழுவாகவும் தனிப்பட்ட ரீதியாகவும் கற்றலிலும் கற்பித்தலிலும் சர்வதேச பங்குதாரர்களை சர்வதேச ரீதியாகவும் பரிமாற்றும் நிகழ்ச்சித் திட்டங்கள்.

இவற்றை கல்வியில் உலகமயமாக்கலுக்கான உதாரணங்களாகக் குறிப்பிடலாம். புதிய கல்வி முறையில் கற்றல் கலாசாரத்தை அடிப்படையாகக் கொண்ட அரசியல், சமூக, பொருளாதார, தொழில்நுட்ப உலகமயமாக்கலில் புதிய கலைத்திட்ட உள்ளடக்க விருத்தியானது முக்கியத்துவம் பெறுகின்ற ஒன்றாகவும் அவசியப்பாடு உடையதாகவும் காணப்படுகின்றது.

அடுத்து உள்ளூர் மயமாக்கலை பார்க்குமிடத்து உள்ளூர் நடத்தை நெறிகள் தொழில்நுட்ப அறிவு, விழுமியம் தொடர்பான மேம்பாடு இசைவாக்கமும் பரிமாறுதலும் உள்ளூர் மயமாக்கம் எனப்படும் கல்வியில் உள்ளூர் மயமாக்கலுக்கு கல்வியில் சமூக ஈடுபாடு, கல்வியை தனியார் மயமாக்கல், பொது நிறுவன பொறுப்புக்களின் உத்தரவாதம் என்பவற்றை உதாரணங்களாகக் கொள்ளலாம். கல்வியில் உள்ளூர் மயமாக்கல் செயன்முறையானது அமெரிக்க, ஐரோப்பிய நாடுகளில் மட்டுமன்றி தற்போது ஆசிய பசுபிக் வலயங்களிலும் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

தனிமனித தேவைகளையும் நடத்தைகளையும் நிறைவுசெய்து கொள்வதற்கு தேவையான நடத்தை நெறிகள், தொழில்நுட்ப அறிவு, வெளியக விழுமியங்கள் தொடர்பான மேம்பாடு, இசைவாக்கம், பரிமாறல் என்பவற்றை தனிமனித மயமாக்கல் எனலாம். கல்வியில் தனிமனித மயமாக்கலின் பிரதான தாற்பரியம் கற்றலிலும் கற்பித்தலிலும் ஆசிரியர்களினதும் மாணவர்களினதும் ஊக்கத்தையும் ஆக்கத்திறனையும் முனைப்பினையும் அதிகரிக்கலாம்.

கல்வி நவீனமயப்படுத்தலில் உலகமயமாக்கலின் நன்மைகளை எடுத்து நோக்கும்போது, இருந்த இடத்தில் இருந்தவாறு ஆசிரியரின் துணையின்றி கணினி மூலமாகக் கல்வியைக் கற்று இணையத்தில் தொடர்பில் இருந்தவாறு (Online) பரீட்சையை எழுதி முடித்து உடனேயே பெறுபேறுகளை அறியமுடிகிறது.

மேலும், பாடசாலைக் கல்விமுறைக்கு உட்பட்ட மாணவன் ஒருவன் வீட்டில் இருந்தவாறு தனக்கான ஒப்படையைச் செய்து Email எனச் சொல்லப்படும் மின்னஞ்சலில் ஒப்படையை அனுப்பியதும் ஆசிரியர் வீட்டிலிருந்தவாறே சரிபார்த்து புள்ளியை வழங்க முடியும். பாடத்திட்டங்கள் அனைத்தும் கணினிமயப்படுத்தப்படுவதால் மாணவர்களின் கற்கும் ஆர்வம் தூண்டப்பட்டு விருப்புடன் கற்பதோடு ஏனைய மொழிகளைக் கற்று அவற்றுடன் இணைந்தவாறு தொழில்நுட்ப அறிவையும் பெறமுடிவதால் பேரறிகை மிக்க சமூகத்தை கட்டியெழுப்ப முடியும்.

நவீன சமூகம் எதிர்நோக்கும் புதிய சவால்களை எதிர்கொள்ளக்கூடிய உயர் ஆற்றலுள்ள பிரசைகளாக மாணவர்களை உருவாக்குவது கல்விக்குரிய முக்கிய கடமை என கல்வியியலாளர்களால் சுட்டிக்காட்டப்படுவதால் அறிவுப் பொருளாதாரத்தைப் பொறுத்தமட்டில் கல்வி ஒரு முக்கிய உற்பத்திக் காரணியாக கருதப்படுகின்றது. மாணவர்களின் அறிவாற்றலை பேரறிகை (Meta Cognition) என்ற ஓர் உயரிய நிலையில் வளர்த்தெடுக்க வேண்டிய தேவை எழுந்துள்ளது.

பேரறிகை என்பது ஒருவர் தனது செயற்றிறன் சார்ந்த அறிவை குறிப்பிட்டதொரு சூழ்நிலைக்குப் பொருந்தும் வகையில் சரியான முறையில் முடிவெடுத்து செயல் ஊக்கத்துடன் விரைவாகச் செயலாற்றும் ஓர் உயர் ஆற்றல் எனக் குறிப்பிடலாம். இதனையே பொருளாதார அபிவிருத்திக்கான குழு (Committee of Economic Develoment, 2006) மாணவர்கள் தனித்து புத்தக அறிவினைக் கொண்டவர்களாக அல்லாது சர்வதேசம் எதிர்பார்த்து நிற்கும் தொழில்சார் திறன்கள் உடையவர்களாக உருவாக்கப்பட வேண்டும் என குறிக்கிறது.

இன்றைய நவீன கல்வி உலகில் அதிகம் எதிர்பார்ப்பது மென் திறன்களைத்தான் (Soft Skills) அறிவு சார்ந்த கல்விக்குப் பதிலாக திறன் மற்றும் மனப்பாங்கு சார்ந்த கல்வியைத்தான் இந்த சமுதாயம் எதிர்பார்க்கின்றது. இதுவும் கல்வியில் நவீனத்துவம் அவசியம் என்பதற்கு அழுத்தம் கொடுப்பதாய் அமைந்தது. இதை ஏன் இங்கு குறிப்பிட விரும்பினேன் என்றால் அறிவுப் பொருளாதாரக் கட்டமைப்பில் மாணவர்கள் பல்வேறு ஆற்றல்களைக் கொண்டவர்களாக இருக்க வேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. சர்வதேசத்தைப் புரிந்து கொள்வதற்கான நிலையம் (Center for international understanding, 2005) மாணவர்கள் பின்வரும் தகுதிகளை கொண்டவர்களாக இருக்க வேண்டும் என சுட்டிக்காட்டுகின்றது.

1. உலகிற்கு விற்கக்கூடியவராகவும் உலகிலிருந்து வாங்கக்கூடியவராகவும் இருத்தல், பல்தேசியக் கம்பனிகளில் வேலை செய்யக்கூடிய ஆற்றல்.

2. பிறநாட்டினர் மற்றும் வேறுபட்ட கலாசாரங்களைப் பின்பற்றுகின்ற தொழிலாளர்களுடன் இணைந்து செயற்படல். ஒரு கூரையின் கீழ் உலகின் பல பாகங்களிலும் வாழுகின்ற மக்கள் ஒன்றிணைக்கின்றபோது, அவர்களுடன் ஒன்றிணைந்து நடத்தல்.

3. உலகின் ஏனைய பகுதிகளில் வேலை செய்கின்றவர்களுடன் தொழில் மற்றும் சந்தை செயற்பாடுகளில் தன்னம்பிக்கையுடன் போட்டி போடக்கூடிய வல்லமை மற்றும் சர்வதேச பிரச்சினைகளை சமாளிக்கக்கூடிய தன்மை.

இன்றைய உலகில் இவையே எதிர்பார்க்கப்படுவதால் நிச்சயமாக கல்வி நவீனமயப்படுத்தும் பட்சத்தில் தான் இவ்வாறு சாத்தியமான ஒரு சுமுக நிலையை இக்காலத்தில் கட்டி எழுப்பமுடியும். அரசிடமிருந்து கல்வியையும் இலவசமாகப் பெற்று அரசிடமிருந்து, எவ்வித முயற்சியுமின்றி வேலையை எதிர்பார்க்கும் அதாவது, 'உடை நலுங்கா உத்தியோகத்திற்கு' முற்றுப்புள்ளி வைப்பதற்கு நவீனத்துவமான கல்வி தேவைப்பாடு உடையதாய் உள்ளது.

நவீனமயப்படுத்தப்பட்ட கல்வியில் என்னென்ன நன்மை என ஆராய்ந்தது போலவே நடுநிலையாக நின்று அதனது இன்னொரு பக்கத்தையும் பார்க்க தவறக்கூடாது. நாணயத்திற்கு இரு பக்கங்கள் உள்ளது போலவே இங்கும் நன்மை தீமை என்ற இருவிடயங்கள் இருக்கவே செய்கின்றது. அவற்றை நன்கு ஆராய்வதும் நம் கடப்பாடே.

ஆரம்பத்தில் குருகுலக் கல்வியாக இருந்து காலத்தின் மாற்றத்தின் போக்கில் இப்போது பாடசாலைக்கல்வியாக பரிணமித்து உள்ளபோதும் அக்காலத்தில் காணப்பட்ட குரு, சீடன் உறவு இல்லாவிடினும் ஓரளவு குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய கணிசமான நல்லுறவு ஆசான் மாணவரிடையே இருக்கத்தான் செய்கிறது. நூல்கள் வாயிலாக அறிவைப் பெற்றுக்கொண்டாலும் வாழ்க்கைக்குத் தேவையான அறிவுரையையும் வழிகாட்டலையும் ஆசிரியர் மூலமாகவே ஒரு மாணவன் பெறுகின்றான். குடும்பம், சமூகம், சூழல் என்பன மாணவனின் கருத்து ஒழுங்கமைப்பில் ஒரு காரணியாக இருப்பினும் அவை ஒரு பகுதியாகவே நோக்கப்படுகிறது. பெரும்பாலான வாழ்க்கைக்குத் தேவையான வாழ்க்கைத் தேர்ச்சியுடைய கல்வியை நூலோடு இணைந்தவகையில் ஆசிரியர் மூலமே ஒரு மாணவன் பெற்றுக்கொள்ள முடியும்.

எனவே, கல்வி நவீனமயப்படுத்தலில் ஆசிரியர் மாணவருக்கான உறவில் விரிசல் ஏற்படுவதாகும். சில சமயங்களில் ஆசிரியர் ஏன்? என்ற கேள்வி மாணவர் மனதில் எழும் வண்ணமாகவும் அவர்களுக்கிடையில் முறிவு ஏற்படுவதாகவும் இந்த கல்வி நவீன மயப்படுத்தல் அமைந்து விடுகிறது. அது எங்ஙனம் என சற்று நோக்குங்கால் கணினியில் அறிவுப் பசிக்கு தீனி போடக்கூடிய பல விடயங்கள் இருக்கின்றன. ஆசிரியரின் துணையின்றியே விளங்கக்கூடியவாறு வடிவமைக்கப்பட்ட புதிய பாடத்திட்டங்கள் செயற்முறைக்கு விடப்படுகின்றன. Youtube போன்றவற்றில் தனித்து அறிவை மட்டும் புகட்டக்கூடிய ஒலி, ஒலி சார்ந்தவை மூலமான கற்றல் நடவடிக்கைகள் பதியப்பட்டுள்ளன.

இவற்றின் காரணமாக கல்வி நவீனமயப்படுத்தலில் குருவிற்கான இடம் ஒதுக்கப்படாததால் தனித்து அறிவை மட்டும் பெற்று வாழ்க்கையில் தோற்றுவிடக்கூடிய சமுதாய உருவாக்கத்திற்கு இது வித்திடலாம். இவற்றின் மூலமாக நல்ல அறிவைப் பெறலாமே தவிர அறிவுரையைப் பெற முடியாது.

மேலும், நல்ல வழிகாட்டல் இல்லாததன் விளைவாக பணிவு, அன்பு, தனித்துவம் போன்ற விழுமியப் பண்புகள் வேரோடு அற்றுப் போவதற்கான சாத்தியங்கள் உள்ளன. குழு மனப்பான்மை இல்லாமையாலும் தனித்து இயங்கும் தன்மையோடு செயற்படுவதாலும் சமூகத்தோடு ஒத்து இணங்கி நடக்கமுடியாத இணக்கப்பாடற்ற தன்னியல்பாகச் செயற்படும் நபர்கள் உருவாக இது வழிசமைக்கலாம். இவற்றினால் மனப்பாங்கு விருத்தி இன்மை, சுயநலப் போக்கு, சமூக சிந்தனைகள் அற்றுப்போதல் போன்ற பாரதூரமான விளைவுகளை ஒரு சமூகம் சந்திக்க நேரிடலாம். தொடர்ந்து கணினியை ஊடகமாகப் பாவித்து கற்பதனால் உடல்ரீதியான பிரச்சினைகளுக்கும் உளரீதியாக நலிவுற்றுப் போதல் போன்ற பிரச்சினைகளுக்கும் முகம் கொடுக்க வேண்டி வரும். அத்துடன், இணையப் பாவனையையும் இக்கற்றலில் மாணவர்கள் கைக்கொள்வதால் அவர்கள் நல்ல விடயங்களை மட்டுமே அதில் பயன்படுத்துவார்கள் என்று உறுதிப்படவும் கூறமுடியாது. தீயவிடயங்களை உள்வாங்குவதற்கும் சந்தர்ப்பங்கள் அதிகம் உள்ளதாலும் இயந்திரமயமான வாழ்க்கைச் சூழலிற்குள் சிக்கும் அபாயம் உள்ளதாலும் இக்கல்வியை நவீனத்துவப்படுத்தலில் பலசிக்கல்களும் சங்கடங்களும் இருக்கவே செய்கின்றன.

நடுநிலையாக நோக்கின் 50% நன்மை என்று பார்த்தால் அதற்கு சரிசமனாக 50% தீமையும் இருப்பதை உணர முடிகின்றது. இன்று இருக்கும் கருத்துக்கு அமைவாக ஆசிரியர் ஒரு வளவாளராக செயற்படுவதுடன் வழிகாட்டியாகவும் செயற்படின் இந்த தீமையின் வீதத்தை இன்னும் குறைத்து நன்மையை அதிகப்படுத்தலாம்.

எது எவ்வாறெனினும், பாலிலுள்ள நீரை தவிர்த்து பாலை மட்டும் பருகும் அன்னப் பறவையைப் போல் தீயவற்றை தவிர்த்து நல்ல மாற்றங்களை மட்டும் உள்வாங்க வேண்டும். நூல்களை மையமாகக் கொண்டமைகின்ற தொடர் கற்றலினால் மட்டும் உயர் அறிகைசார்ந்த திறன்களை அடைய முடியாததனால் வேலை உலகு வேண்டி நிற்கும் தொழில்சார் திறன்களை வளர்ப்பதற்கும் விமர்சன ரீதியாக பகுத்தாய்ந்து சிந்திக்கும் ஆற்றல், முடிவெடுக்கும் ஆற்றல், படைப்பாற்றல் போன்றவற்றை மேம்படுத்துவதற்கும் நூற்கல்விக்கும் அப்பாற்பட்ட திறன்விருத்தி சார்ந்த கற்றல் செயற்பாடுகளில் கவனம் எடுக்க வேண்டும்.

உலக முன்னணி நிறுவனங்களில் ஒன்றான உலகவங்கி கல்வி மனிதனுள் முதலீடு எனக்குறிப்பிடுவதாலும் கல்வியை அடிப்படை சமூக சேவையாக பெயரிட்டுள்ளதாலும் கல்வியை மேம்படுத்தும் கல்வி நவீனமயப்படுத்துவதும் இன்றியமையாததாகின்றது. எனவே, புதிய மாற்றங்களை உள்வாங்கி,

எப்பொருள் யார்யார் வாய்கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு

என்ற வள்ளுவன் குறளிற்கு இணங்க மெய்ப்பொருளை கண்டறிந்து புதியதொரு வளம்மிக்க சமுதாயத்தை கல்வியால் உருவாக்க வேண்டும்.

எண்ணிய முடிதல் வேண்டும்
நல்லவே எண்ணல் வேண்டும்
திண்ணிய நெஞ்சம் வேண்டும்
தெளிந்த நல்லறிவு வேண்டும்.